செய்தி வெளியீடு எண்: 518 நாள் : 27.09.2013

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்** அவர்களால் 27/09/2013 அன்று காலை 10.00 மணியளவில் வணிகவரித்துறை இணை ஆணையர்களின் பணித்திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்துறையின் ஆய்வில் அரசு முதன்மை செயலர் திரு எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., மற்றும் வணிகவரி ஆணையர் மரு.க. மணிவாசன், இ.ஆ.ப., பங்கேற்றனர்.

இந்த நடப்பாண்டில் செயலாக்கப் பிரிவினரால் ரூ.81 கோடி வசூல் செய்யப்பட்டது. சென்ற ஆண்டு ரூ.14 கோடி மட்டுமே வசூல் செய்யப்பட்டுள்ளது. வணிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளைப் பற்றி குறிப்பிடுகையில் வணிகர்கள் வலைத்தளம் வழியாக 11,83,770 'சி' படிவங்களும் மற்றும் 48,941 'எப்' படிவங்களும் அவர்களது வணிக இடத்திலிருந்தே படியிரக்கம் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. மேலும் வணிக இடத்திலிருந்தே வலைத்தளம் மூலம் 3,40,800 மாதாந்திர நமூனாக்கள் பெறப்பட்டு வரி ரூ.2468.36 கோடி வலைத்தளம் மூலம் வணிகர் இடத்திலிருந்தே வரி செலுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வணிகவரி வருவாயானது, ஆகஸ்ட் மாதத்தில் ரூ.4112.46 கோடி வசூலித்து 4.26 சதவிகித வளர்ச்சியும் ஆகஸ்ட் மாதம் வரையில் நிதியாண்டில் ரூ.20120.91 கோடி வசூலிக்கப்பட்டு 4.42 சதவிகித வளர்ச்சியும் அடைந்துள்ளதை சுட்டிக்காட்டி வருவாய் குறியீட்டினை அடைய வணிகவரி துறை அலுவலர்கள் அயராது பாடுபட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். மாநில அளவில் எட்டப்பட்ட வளர்ச்சியானது அனைத்து கோட்டங்களின் அளவிலும் அனைத்து வரிவிதிப்பு வட்டங்களின் அளவிலும் ஈட்டப்படவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா** அவர்களின் சமூக நலத் திட்டங்களுக்கும், இம்மாநிலத்தின் வளர்ச்சித்திட்டங்களுக்கும் தேவையான நிதியில் வணிகவரி வருவாயின் வளர்ச்சி முக்கிய காரணியாக விளங்குவதால் வணிகவரித்துறை அலுவலர்கள் தமது பணிகளில் தீவிர கவனம் செலுத்தி வரிவருவாயை பெருக்க முழு முயற்சி மேற்கொண்டு இவ்வருட குறியீட்டினை அடையவேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

இப்பணிகளுள் வணிகர்களின் மாதாந்திர நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல், நமூனா பெறுதல், பெறப்படாத நமூனாவின் மீதான உரிய நடவடிக்கை, நிலுவையில் உள்ள

மத்திய விற்பனை வரிச்சட்ட வரிவிதிப்பு மற்றும் நிலுவையில் உள்ள செயலாக்கப்பிரிவின் முன் மொழிவுகளை விரைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றில் அனைத்து வரிவிதிப்பு அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்கள் மற்றும் வாகன சோதனையில் கண்டறியப்படும் வரி ஏய்ப்பு இனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

வணிகவரித்துறையின் இரு பிரிவுகளும் போலி வணிகம் செய்யும் வணிகர்கள் மீது ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கை எடுத்தும் தவறான உள்ளீட்டு வரியினால் பயனடைந்த வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தும் அரசு வருவாயினை பாதுகாக்க வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி அறியப்படும் வணிக இனங்களிலும், அதிக உள்ளீட்டு வரியினை கோரியுள்ள மற்றும் முன்கொணர்ந்த இனங்களிலும் கூர்ந்தாய்வு செய்து காரணங்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். வணிகவரி கோட்ட அளவில் இணை ஆணையர்கள், துணை ஆணையர்களும் வரி நிலுவைகளை வசூலிக்கவும், மாதாந்திர நமூனாக்களை விடுதலின்றி வசூலிக்கவும், வரி வழக்குகளில் துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையிலுள்ள வரி வருவாயை வசூலிக்கவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவாய் இலக்கினை அடை யவேண்டும் என கேட்டுக்கொண்டு ஆய்வினை நிறைவு செய்தார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9